நகர்மன்றம்,
போடிநாயக்கனூர், நாள். 08.03.2019

2019ம் ஆண்டு மார்ச் மாதம் 8.03.2019ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திரு.சு.செளந்தரராஜன்.,
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்

**1)**இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்கள்.2,7,10,23 மற்றும் 27ல் உள்ள ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்களை குத்தகை எடுப்பது தொடர்பாக தொடரப்பட்ட வழக்கு எண்கள்.WP(MD)No.12129/2018, WP(MD)No.12130/2018, WP(MD)No.12202/2018 மற்றும் WP(MD)No.12268/2018ன் கீழ் வழக்குகளை நகராட்சி சார்பில் வாதிட்டதற்கு வாதுரை கட்டணம் ஒன்றுக்கு ரூ.7500/– வீதம் நான்கு வழக்குகளுக்கு மொத்தம் ரூ.30,000/– வழங்கக்கோரி அரசு வழக்கறிஞர் திரு.எம்.கருப்பசாமிபாண்டியன் அவர்களிடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண். 4530/2017/அ2.**
**தீர்மான எண்: 396 அனுமதிக்கப்பட்டது.**

**2)**இந்நகராட்சி திட்டப்பணிகள் குறித்த விளம்பரங்களை விளம்பரம் செய்தமைக்கு கட்டணத்தொகை ரூ.9900/–ஐ தினத்தந்தி செய்தி நாளிதழ் அவர்களுக்கு விளம்பர கட்டணத்தொகையாக பொதுநிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண். 866/2019/இ1**
**தீர்மான எண்: 397 அனுமதிக்கப்பட்டது.**

**3)**இந்நகராட்சிக்கு 2019–20ம் ஆண்டிற்கு தேவையான எழுதுப்பொருட்கள், படிவங்கள், பதிவேடுகள், பேரேடுகள் கொள்முதல் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.15.00 (பதினைந்து லட்சம்)ஐ பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின்அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண். 0921/2019/பி2**
**தீர்மான எண்: 398 அனுமதிக்கப்பட்டது.**

**4)** இந்நகராட்சியில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள்-2019-னை அரசாணை நிலை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA1)நாள்.04.02.2019-.ல உத்திரவு பிறப்பிக்கப்பட்டு அதனை தமிழ்நாடு அரசிதழில், அரசிதழ் எண்.43, நாள்.04.02.2019-ல் வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணை மற்றும் தமிம்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள்-2019 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண். 978/2019/எப்1**
**தீர்மான எண்: 399 பதிவு செய்யப்பட்டது.**

**5)** தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள்-2019-ன் விதி 14-ல் திட்ட அனுமதி அல்லது கட்டிட அனுமதி 5 ஆண்டுகள் மற்றும் ஒருமுறை காலநீட்டிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே முதலில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி கோரும் விண்ணப்பதாரர்களுக்கு கட்டிட அனுமதி கட்டணம் மற்றும் திட்ட அனுமதி கட்டணம் ஆகியவற்றினை தற்போது வசூலிக்கப்படும் தொகையுடன் கூடுதலாக 25 சதவீதம் உயர்த்தி நிர்ணயம் செய்து அட்டவணையில் கண்டவாறு

வசூலிக்கவும், மேலும் ஒரு முறை காலநீட்டிப்பு 3 ஆண்டுகள் வழங்க விண்ணப்பிக்கப்படும்போது நபர்களுக்கு நடப்பில் முதலில் செலுத்தப்பட்ட விகிதத்தில் கட்டணம் முழுவதும் வசூலிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :** 1)அனுமதிக்கலாம்.

2)தற்போது கட்டிடம் கட்டுவதற்கு அனுமதிகாலம் மூன்று ஆண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகளாக உயர்த்தி உள்ளதால் முதலில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி கோரும் விண்ணப்பதாரர்களிடம் தற்போது வசூலிக்கப்படும் தொகையுடன் 25 சதவீதம் கூடுதலாக நிர்ணயம் செய்து கட்டிட உரிமக்கட்டணம் வசூல் செய்யவும், ஒரு முறை கால நீட்டிப்பு 3 ஆண்டுகள் வழங்கி நடப்பில் முதலில் செலுத்தப்பட்ட விகிதத்தில் கட்டணம் வசூலிக்கவும் மன்றம் முடிவு செய்யலாம்.

3)கட்டணங்கள் திருத்தியமைக்கப்பட்ட விபரங்களை விளம்பரம் செய்யவும், அதற்கான செலவினத்திற்கும் அனுமதி வழங்கலாம்.

## அட்டவணை

போடிநாயக்கனூர் நகராட்சியில் 2012 ஆண்டு பிப்ரவரி 2-ம் தேதி முதல் நடைமுறையில் உள்ள கட்டிட சம்பந்தமான உரிமையாணை கட்டணங்களை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 321 (2), 328 மற்றும் 329-. கீழ் மற்றும் அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019- ன் வழிகாட்டுதலின்படி 01.04.2019 முதல் கீழ்கண்டவாறு மாற்றியமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவுகள் | காரியம் அல்லது தொழிலின் விபரம் | அளவு விபரம் (மீட்டரில்) | காலம் | ஏற்கனவே உள்ள கட்டண விகிதம் (ரூபாய்) | 25% வீதம் உயர்வு செய்து நிர்ணயிக்கப்படும் கட்டணம் (ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| 175 , 176 | காலி நிலத்தை தெருக் களையும் வீட்டு மனைகளாகவும் பிரித்து அங்கீகாரம் பெற ( மேற்பார்வைக் கட்டணம் ) | ஒரு ஹெக்டேர் | ஒரு தடைவ | 1000 | 1250 |
| 181 | சாலையை நோக்கி வாசல்களில் இருக்கக்கூடிய வெளிப் பக்கமாக திறக்கக்கூடிய கதவுகள். | | | | |
| | அ) குடியிருப்பு வீடுகளுக்கு | ஒவ்வொரு கதவு முதலியன | நிதி ஆண்டு ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு | 50 | 65 |
| | ஆ) குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு | --அதே-- | --அதே-- | 60 | 75 |
| 183(1) | வாராந்திர பால்கனிவேலை தட்டி துவானத்தட்டி , ஆர்.சி.சி. சன்சேடு போன்ற ஆட்சேபனை இல்லாத ஆக்கிரரமப்புகள் | | | | |
| | அ) வர்த்தகக்காரியம் அல்லாத இதர காரியங்களுக்கு உபயோகப்படுத்தப்டும் கெட்டிடங்களுக்கு முன்கால் இல்லாமல் உள்ளவைகளுக்கு | ஒவ்வொரு ச.மீட்டர் மற்றும் அதன் பாகத்திற்கு | --அதே-- | 30 | 40 |
| | ஆ) மேற்படி வர்த்தக காரியங்களுக்கு உபயோகப்படுத்த போடப்பட்டுள்ள படி கல் அல்லது கட்டிடங்கள் முன்பு போடப்பட்டுள்ள குரடு, திண்ணை இதைப்போன்ற | | | 40 | 50 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆட்சேபனை அல்லாத ஆக்கிரமிப்புள் | | | | |
| | இ)ஆககரமிப்பு தெரு, நிலத்தில் நீண்டுள்ள குரடு, திண்ணை வராந்தா | -அதே- | -அதே- | 50 | 65 |
| | ஈ) படிவள் | -அதே- | -அதே- | 50 | 65 |
| | உ) சாக்டைத் தொட்டிகள் | -அதே- | -அதே- | 50 | 65 |
| | ஊ) செங்கல் கட்டிடம் பகுதி ஆக்கிரமிப்பு | -அதே- | -அதே- | 50 | 65 |
| | எ)மண்மதில், கூரை போன்ற குடிசைப்பகுதிகளுக்கு | -அதே- | -அதே- | 50 | 65 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2) பொதுத் தெருக்களிலும் நகராட்சி ஆளுகையிலுள்ள பொது இடங்களிலும் தற்காலிக ஆக்கிரமிப்புகள் | | | | |
| | அ)வீட்டு விழாக்களிலும் வியாபார நோக்கு இல்லாத இதர விழாக்களிலும் பந்தல் போடுவதற்கு | ஒவ்வொரு 10 ச.மீ. அல்லது அதன் பாகத்திற்கு | நாள் ஒன்றுக்கு | 100 | 125 |
| | ஆ)வியாபார நோக்குடன் உள்ள காரியங்களுக்கு பந்தல்கள் போடுவதற்கு | -அதே- | நாள் ஒன்றுக்கு | 100 | 125 |
| | இ)கோடை கால பந்தல்கள் (போக்குவரத்திற்கு இடைஞ்சல் அல்லாதவற்றிற்கு கால்கள் இல்லாமல்) | நாள் ஒன்றிற்கு | ஏப்ரல் முதல் ஜூன் 30 முடிய 3 மாதங்கள் | இலவசம் | இலவசம் |
| | ஈ) மத சம்மந்தமான திருவிழா காலங்களில் கோவில்கள் முன் பந்தல்கள் போடுவதற்கு, தேர்தல் காலத்தில் பொதுப்பந்தல்கள் போடுவதற்கும் | - | - | இலவசம் | இலவசம் |
| | உ)நிழல் தட்டிகள் | ஒவ்வொரு மீட்டர் மற்றும் அதன் பாகத்திற்கு | நிதி ஆண்டு ஒன்றுக்கு | | |
| | 1) தகர நிழல் தட்டி | | | 30 | 40 |
| | 2) கிடுகு நிழல் தட்டி | | | 20 | 25 |
| 183(2)(இ) | அ)நகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் விளம்பரப்பலகை அமைத்து விளம்பரம் செய்ய வர்ணம் பூசி விளம்பரம் செய்ய | -அதே- | -அதே- | 50 | 65 |
| | ஆ)பஸ்நிலையத்தில் விளம்பரம் செய்ய | -அதே- | -அதே- | 50 | 65 |
| 183(2)(எ) | எ)குடிசை நீங்கலாக கட்டிடங்கள் கட்டுவதற்கு அங்கீகரித்தல் எந்த தனிப்பட்ட இடத்தையும் | 100 ச.மீ. அதன் பாகம் | ஒரு தடைவ | 100 | 125 |
| | -அதே- | 500 ச.மீ மேல் | -அதே- | 150 | 190 |
| | -அதே- | 100 ச.மீ. முதல் 500 ச.மீ வரை | -அதே- | 200 | 250 |
| 197 (1)(பி) | பி) மில்தொழிற்சாலை கடை சினிமா கொட்டகை கட்ட குடியிருப்பு அல்லாத மற்றும் வர்த்தகம் தொழிற்சாலைக்கான கட்டிடங்கள் | 100 ச.மீ. அதன் பாகம் | ஒரு தடைவ | 100 | 125 |
| | -அதே- | 100 ச.மீ. முதல் 500 ச.மீ வரை | -அதே- | 150 | 190 |
| | -அதே- | 500 ச.மீ | -அதே- | 200 | 250 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | மேல் | | | |
| | குடிசை கட்ட புதிதாகவோ கட்டுவதற்கு கூரையை மாற்றி அமைக்கவோ இடித்து கட்ட கட்டும் கட்டுமானங்களுக்கு | மணிக்கு | | 50 | 65 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 197 (1) 215 மற்றும் 203 | அ)குடிசை நீங்கலாக புதுக்கட்டிடம் மாறுதல் செய்து கட்டுதல் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி | | | | |
| | அ) தரைத்தளம்<br><br>ஆ)முதல் தளம்<br><br>இ) இரண்டாம் தளம் | ஒவ்வொரு 10 ச.மீட்டர் அதன் பாகத்திற்கு | 5வருடங்கள் | 100<br><br>120<br><br>150 | 125<br><br>150<br><br>200 |
| | <u>ஆ).குடியிருப்பு அல்லாத மற்ற உபயோகத்திற்காக ( Non Residential)</u> ஆர்.சி.சி.அல்லது லாகடக் கட்டுவதற்கு<br>அ) தரைத்தளம்<br>ஆ) முதல் தளம்<br>இ) இரண்டாம் தளம் | 10 ச.மீட்டர் அதன் பாகத்திற்கு | 5வருடங்கள் | 160<br>250<br>320 | 200<br>320<br>400 |
| | 3)ஓடு, சிமிண்ட் ஓடு , தகரம் கூரை கட்டிடம் | ஒவ்வொரு 10 ச.மீட்டர் அதன் பாகத்திற்கு | 5வருடங்கள் | 60 | 75 |
| | அ) குடியிருப்பு உபயோகத்திற்காகவது | -அதே- | -அதே- | 100 | 125 |
| | ஆ) குடியிருப்பு அல்லாத உபயோகத்திற்கு | -அதே- | -அதே- | 100 | 125 |
| | 4)சுற்றுச்சுவர் | | | | |
| | அ) 1.5 மீட்டர் உயரத்திற்கு மேற்படாத | -அதே- | -அதே- | 100 | 125 |
| | ஆ) சுற்றுச்சுவர் மண் அல்லது வேலிபோட | -அதே- | -அதே- | 50 | 65 |
| | 5)குளியலறை , மல அறை கட்டுவற்கு | ஒவ்வொன்றுக்கும் | | | |
| | அ) குளியலறை கட்ட | -அதே- | -அதே- | 50 | 65 |
| | ஆ) சாதாரண மர அறை கட்ட | -அதே- | -அதே- | 50 | 65 |
| | இ)செப்டிக்டேங்க் மல அைை கட்ட | -அதே- | -அதே- | 100 | 125 |
| | 6) மாடிப் படிகள் கட்டுவதற்கு கட்டிடங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் கட்ட | மாடிப்படி ஒன்றுக்கு | - | 100 | 125 |
| | 7)கிணறு வெட்ட | ஒவ்வொரு 10 ச.மீட்டர் அதன் பாகத்திற்கும் | 5 ஆண்டுகள் | 100 | 125 |
| | 8) பழைய சுவர்களை புதுப்பித்துக் கொள்ள தகரங்களை மாற்றிக் கொள்ள இதுபோன்ற மராமத்து அனுனுதி கட்டணம் | -அதே- | -அதே- | 100 | 125 |
| | 9) மண்ணில் கூரை வீடு மண்மதில் தகரவீடு | -அதே- | -அதே- | 100 | 125 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 197 | கட்டிடம் கட்டும் போதோ கட்டிடத்தை இடித்து மாற்றும் போதோ, ,ட்டிடத்தை மராமத்து பணிகள் செய்திடும் போதோ அதற்காக மறைப்பு தெரு ஓரத்தில் அமைத்திட | ஒரு சதுர மீட்டருக்கு அதன் பாகத்திற்கு | ஒரு மாதம் | 100 | 125 |
| 217 (1) | 1)தனிப்பட்டோர் நிலத்தில் தற்காலிக கீற்றுக் கொட்டகை போட | -அதே- | மாதம் ஒன்றுக்கு | 100 | 125 |
| | 2)அனுமதி வழங்கப்பட்ட கட்டிட வரைபடங்களுக்கு ஒண்மை சான்றிதழ் வழங்க | வரைபட நகல் ஒன்றுக்கு | | 100 | 125 |
| | 3)மேல்நிலைத் தொட்டி அமைக்க | ஒவ்வொன்று க்கும் | 5 வருடம் | 100 | 125 |
| | 1)லைசென்ஸ் சர்வேயர் உரிமை ஆணை கட்டணம் | | ஆண்டுக்கு | 5000 | 2500 |
| | 2)லைசென்ஸ் சர்வேயர் உரிமை ஆணை புதுப்பிக்கக் கட்டணம் | | ஆண்டுக்கு | 750 | 950 |
| | நகரமைப்புத்திட்ட நகல் நகல் வழங்க | வரைபடம் ஒன்றுக்கு | ஆண்டுக்கு | 300 | 375 |
| | முழுமைத்திட்ட வரைபட நகல் புத்தகத்துடன் வழங்க | வரைபடம் ஒன்றுக்கு | ஆண்டுக்கு | ∴500 | 625 |
| | இடிந்த கட்டிடங்கள் கட்டுமான கழிவுப் பொருட்கள் அகற்ற | லாரி லோடு ஒன்றிற்கு | ஒரு தடைவ மட்டும் | 500 | 625 |
| | தெரு ஓரங்களில் கட்டிட சாமான்கள் சேகரித்து வைத்தல்-கட்டிட உரிமைக்கட்டணத்தில் 75 சதவிகிதம் வசூலிக்கப்பட வேண்டும். | | | | |

வளர்ச்சி கட்டணங்கள்(Development Charges)

| தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவுகள் | காரியம் அல்லது தொழிலின் பெயர் | அளவு விபரம் மீட்டரில் | காலம் | பழைய கட்டண விகிதம் ரூபாய் | புதிய கட்டண விகிதம் ரூபாய் |
|---|---|---|---|---|---|
| 197,201 & 215 | குடியிருப்பு Site | 1 ச.மீ | 5 வருடம் | ரூ.1.50 | ரூ.3.00 |
| | குடியிருப்பு Building | 1ச.மீ | | ரூ.3.00 | ரூ.5.00 |
| | வணிக கட்டிடம் Site | 1 ச.மீ | | ரூ.3.00 | ரூ.5.00 |
| | வணிக கட்டிடம் Building | 1ச.மீ | | ரூ.6.00 | ரூ.10.00 |

**(ந.க. எண்.978/2019/எப்.1)**

**தீர்மான எண்: 400 அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**6)** அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.43, பகுதி III பிரிவு 1(a) நாள்.04.02.2019-ன்படி தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019-ல் அறிவுறுத்தயுள்ளபடி நகராட்சிப்பகுதிகளில் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்குவதற்கு விதி எண்.30(1), 30 (2)-ல் குறிப்பிட்டுள்ளவாறு போடிநாயக்கனூர் நகராட்சியில் கீழ்க்காணும் நகரளவை எண்களைக் கொண்ட பகுதிகளை தொடர் கட்டுமான பகுதிகள் (Continuous Building Area) மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதி (Economically Weaker Section) என வகைப்படுத்த மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**தொடர் கட்டுமான பகுதிகள் (Continuous Building Area)**

| வ.எண் | பகுதி (தெரு) | சர்வே எண்கள். |
|---|---|---|
| 1 | ஒழுகால்பாதை | S.Ward-II; Block No-54;<br>T.S.No.3992/1, 3992/2, 3992/3, 3992/4, 3991/1,& 3993 |
| 2 | வ.உ.சி.நகர் | S.Ward-II; Block No-52;<br>T.S.No.3989<br>S.Ward-II; Block No-53;<br>T.S.No.3994.<br>S.Ward-II; Block No-51;<br>T.S.No.3988 |
| 3 | ஜீவா நகர் | S.Ward-IV; Block No-7;<br>T.S.No.832 To 857 |
| 4 | டி.வி.கே.கே.நகர். | S.Ward-II; Block No-33;<br>T.S.No.4171 |
| 5 | திருமலாபுரம் (மடம் தெரு, செந்திவிநாயகர் தெரு, சொக்கன் தெரு) | S.Ward-III; Block No-2;<br>T.S.No.61 to 66<br>T.S.No.68 to 71<br>T.S.No.77 to 84<br>T.S.No.87 to 98 |
| 6 | சாமியார் தெரு | S.Ward-III; Block No-3;<br>T.S.No.98 to 273 |
| 7 | இரட்டைப்புலவர் சந்து, நடுத்தெரு, அழகிரி சந்து, பெருமாள் கோவில் தெரு | S.Ward-III; Block No-4;<br>T.S.No.276 to 530 |
| 8 | பார்டீசியன் சந்து, பட்டாளம்மன் கோவில் தெரு | S.Ward-IV; Block No-1;<br>T.S.No.1 to 277 |
| 9 | வெள்ளையாண்டி சந்து, முத்துப்பாண்டி சந்து | S.Ward-IV; Block No-2;<br>T.S.No.286 to 452 |
| 10 | கிருஷ்ணதேவராயர் தெரு, பாரதிநாராயணசாமி தெரு | S.Ward-IV; Block No-3;<br>T.S.No.463 to 616 |
| 11 | பக்தசேவா தெரு, வெள்ளையப்பன் தெரு | S.Ward-IV; Block No-4;<br>T.S.No.619 to 784 |
| 12 | சின்னச்சாமி தெரு, சௌந்திரவேல் சந்து கீழத்தெரு | S.Ward-II; Block No-9;<br>T.S.No.726 to 1116 |
| 13 | பெருமாள் கோவில் தெரு, கட்டியகாரன் கிணற்றடி சந்து, காமாட்சியம்மன் கோவில் தெரு | S.Ward-II; Block No-13;<br>T.S.No.2027 to 2454 |
| 14 | நாட்டாண்மைக்காரர் சந்து, செக்கடிசந்து | S.Ward-II; Block No-8;<br>T.S.No.557 to 592<br>T.S.No.665 to 714 |

| வ.எண் | பகுதி (தெரு) | சர்வே எண்கள். |
|---|---|---|
| 15 | செல்லாயி அம்மன் கோவில் தெரு, தேரடி வீதி, பள்ளிவாசல் தெரு | S.Ward-II; Block No-7;<br>T.S.No.353 to 473<br>T.S.No.476 to 518<br>T.S.No.521 to 525 |
| 16 | சௌந்திரவேல் நகர் | S.Ward-II; Block No-6;<br>T.S.No.229A |
| 17 | பரமசிவன் கோவில் தெரு, புலவர்கான் | S.Ward-II; Block No-17; |

| | | |
|---|---|---|
| | முகமது தெரு | T.S.No.3212 to 3225<br>T.S.No.3230 to 3309<br>T.S.No.3311 to 3325 |
| 18 | வெள்ளையப்பன் சந்து<br>குருசாமி சந்து, சுப்பிரமணிய சுவாமி கோவில் வடக்கு தெரு | S.Ward-II; Block No-16;<br>T.S.No.3064 to 3210 |
| 19 | நந்தவனம் | S.Ward-II; Block No-21<br>T.S.No.4087,4088,4089 |
| 20 | என்.பி. ராமசாமி சந்து | S.Ward-II; Block No-22<br>T.S.No.3554 PART |
| 21 | குலசேகரபாண்டியன் தெரு | S.Ward-II; Block No-20<br>T.S.No.3509 To 3531<br>4033 To 4042 |
| 22 | வென்னிமலை தெரு | S.Ward-II; Block No-19<br>T.S.No.3461 To 3467<br>3470 To 3503 |

| பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதி (Economically Weaker Section) | | |
|---|---|---|
| 1 | முனிசிபல் காலனி | S.Ward-II; Block No-5;<br>T.S.No.807, 808 |
| 2 | கலைவாணர் தெரு | S.Ward-IV; Block No-1;<br>T.S.No.41 To 79 |
| 3 | டி.வி.கே.கே.நகர் | S.Ward-II; Block No-40; New T.S.No.15 |
| 4 | புதூர் | S.Ward-I; Block No-3;<br>T.S.No.94 To 160 |
| 5 | ஜமீன் தோப்பு ரோடு | S.Ward-II; Block No-49;<br>T.S.No.235/1 Part |
| 6 | சர்ச் தெரு | S.Ward-II; Block No-10;<br>T.S.No.1126 To 1283 |
| 7 | மதுரை வீரன் தெரு (பழைய ஆஸ்பத்திரி தெரு ). | S.Ward-II; Block No-11;<br>T.S.No.11287 To 16329; 1705 To 1849; |
| 8 | ஜே.கே.பட்டி | S.Ward-IV; Block No-9; New T.S.No.801<br>S.Ward-IV; Block No-5; New T.S.No.812 |
| 9 | குலாலர்பாளையம் | S.Ward-VI; Block No-1; New T.S.No.9 To 71; 81,82, 114 To 209 |
| | குப்பிநாயக்கன்பட்டி | S.Ward-V; Block No-2; New T.S.No.10 To 80;<br>S.Ward-V; Block No-3; New T.S.No.90 To 218; |

**அலுவலக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண். **978/2019/எப்1**

**தீர்மான எண்: 401 ஒப்புதலளிக்கப்பட்டது.**

**7)**இந்நகராட்சியில் மக்கள் நலப்பணிகள் குறித்த திட்டப்பணிகள் விளம்பரம் செய்தமைக்கு தினபூமி நாளிதழ் அவர்களுக்கு விளம்பரக் கட்டணத்தொகை ரூ.19,950/-ஐ விளம்பரக்கட்டணமாக வழங்க பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண். 455/2019/இ1**
**தீர்மான எண்: 402 அனுமதிக்கப்பட்டது.**

**8)**இந்நகராட்சியில் மக்கள் நலப்பணிகள் குறித்த திட்டப்பணிகள் விளம்பரம் செய்தமைக்கு தினகரன் நாளிதழ் அவர்களுக்கு விளம்பரக் கட்டணத் தொகை ரூ.10,080/- ஐ விளம்பரக் கட்டணமாக வழங்க பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
**அலுவலக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண். 920/2019/இ1**
**தீர்மான எண்: 403 அனுமதிக்கப்பட்டது.**

**9)**வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் பொது மக்களுக்கு அரசு ரூ.2000/- வழங்கும் திட்டத்திற்கு இந்நகராட்சி பொதுமக்களிடமிருந்து விண்ணப்ப படிவங்களை பூர்த்தி செய்தும் அதனை கணினியில் பதிவேற்றம் செய்யவும் தனியார் மூலம் மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/-ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :**

1. மேற்கண்ட பணியின் அவசரஅவசியம் கருதி தனியார் அச்சகங்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று விண்ணப்பபடிவங்களை அச்சடிக்கவும் மேலும் விண்ணபங்களை வீடுவீடாக சென்று பூர்த்தி செய்து மேலும் அதனை கணினியில் பதிவேற்றம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 727/2019/எச்2**
**தீர்மான எண்: 404 அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**10)**இந்நகராட்சியில் அரசு வழங்கும் சிறப்பு நிதியுதவி ரூ.2000/-க்கான விண்ணப்பப்படிவம் மற்றும் ஒப்புகை சீட்டு அச்சிடுவதற்கு தகுதி வாய்ந்த அச்சகங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் 15.02.2018ம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டு வரப்பெற்ற கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | விபரம் | ஒப்புகை சீட்டு | விண்ணப்பபடிவம் |
|---|---|---|---|
| | | தொகை ரூ. 1000 எண்ணத்திற்கு | தொகை ரூ.1000 எண்ணத்திற்கு |
| 1 | பிரிண்ட்டெக், போடி | 850/– | 3200/– |
| 2 | ஸ்ரீ விநாயகா டிஜிட்டல் பிரிண்டிங், போடி | 800/– | 3000/– |
| 3 | அய்யப்பா பிளக்ஸ் போடி | 750/– | 2700/– |

**அலுவலக்குறிப்பு :**

1. குறைந்த விலைப்புள்ளி வழங்கிய அய்யப்பா பிளக்ஸ், போடி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கலாம்.
2. இச்செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 727 /2019/எச்2**
**தீர்மான எண்: 405 மெஸர்ஸ் அய்யப்பா பிளக்ஸ், போடி அவர்களது குறைந்த விலைப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**11)**இந்நகராட்சியில் அரசு வழங்கும் சிறப்பு நிதியுதவி ரூ.2000/- க்கான விண்ணப்படிவங்களை கணினியில் பதிவேற்றம் செய்ய தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் 16.02.2018ம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டு வரப்பெற்ற கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | விபரம் | தொகை ரூ. 01 எண்ணத்திற்கு |
|---|---|---|
| 1 | CSC Computer Education, Bodi | 6/– |
| 2 | Verutcham Trust, Bodi | 5/– |
| 3 | R S Infotech, Chinnamanur | 7/– |

**அலுவலக்குறிப்பு :**

1. குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Verutcham Trust, போடி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கலாம்.
2. இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 727/ 2019/எச்2**

**தீர்மான எண்: 406 விருட்சம் டிரஸ்ட், போடி அவர்களது குறைந்த விலைப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**12)**இந்நகராட்சிக்கு சொந்தமான TN60Q 5418 ஈப்பு வாகனத்திற்கு **140000**கி.மீ ஓடியுள்ளதால் கீழ்க்கண்ட பராமரிப்புப்பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

1.வண்டி முழுவதும் ஆயில்கள் சர்வீஸ் செய்தல்.
2.முன்புறக் கண்ணாடி புதியது மாற்றுதல்.
3.வீல் அலாய்மெண்ட் சரி செய்தல்.
4.ஏர் கண்டிசனர் (A.C) சரி செய்தல்.

அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான TV Sundram Iyengar and Sons (P) Ltd நிறுவனத்தின் பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.**65,000/–**பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 993/2019/இ1**

**தீர்மான எண்: 407 அனுமதிக்கப்பட்டது.**

**13)**இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் பொது சுகாதார வளாகம் TN60 AY 1176 (ம) TN 60 V 0533ல் ஏற்பட்டுள்ள பழுது நீக்கம் செய்து பணி மேற்கொள்ள விலைப்புள்ளி கோரப்பட்டு வரப்பெற்ற கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | விபரம் | தொகை ரூ TN60 AY 1176 | தொகை ரூ TN 60 V 0533 |
|---|---|---|---|
| 1 | TV Sundaram Iyenar & Sons Pvt.Ltd, Theni | 1,35,775/– | 1,31,750/– |
| 2 | Sethuram Motor Workshop Periyakulam | 1,43,530/– | 1,38,125/– |
| 3 | Shree Karuppasamy Bus Body Fitting Periyakulam | 1,44,440/– | 1,47,967/– |

**அலுவலக்குறிப்பு :**

1. குறைந்த விலைப்புள்ளி வழங்கிய TV Sundaram Iyengar & Sons Pvt.Ltd நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கலாம்.
2. இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 358/2019 /எச்2**

**தீர்மான எண்: 408 அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**14)**இந்நகராட்சியின் கீழ் இயங்கி வரும் அம்மா உணவகத்திற்கு தேவையான டோக்கன்கள் 2019-2020ம் ஆண்டுக்கு ஒரு வருடத்திற்கு டோக்கன்அச்சடித்து வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.20,000/-க்கு நகராட்சிக்கு எழுதுப்பொருட்கள் மற்றும் படிவங்கள் கொள்முதல் மேற்கொள்ளும் நிறுவனம் தேனி மாவட்ட அச்சக சேவை தொழில் கூட்டுறவு சங்கம் லிட் தேனி மூலம் கீழ்க்கண்ட டோக்கன்கள் கொள்முதல் செய்வது குறித்த விபரம்

| | | |
|---|---|---|
| 1. இட்லி டோக்கன் (1புக் 100 எண்ணம்) | - | 550புக் |
| 2. சாம்பார் சாத டோக்கன்(1புக் 100 எண்ணம்) | - | 135புக் |
| 3. தயிர் சாதடோக்கன் (1புக் 100 எண்ணம்) | - | 135புக் |
| | | --------- |
| | | 820புக் |
| | | --------- |

மேற்கூறிய விபரப்படி டோக்கன்கள் அச்சடித்து கொள்முதல் செய்யவும் உரிய செலவினம் பொது விதியில் இருநது மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :** பணியின் அவசர அவசியம் கருதியும் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தேனி மாவட்ட அச்சக சேவை தொழில் கூட்டுறவு சங்கம் லிட் தேனி மூலம் டோக்கன்கள் அச்சடிக்கவும் உரிய செலவினம் மேற்படி நிறுவனத்திற்கு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1048/2018/பி3**

**தீர்மான எண்: 409 அனுமதிக்கப்பட்டது.**

**15)**இந்நகராட்சிக்குச் சொந்தமான கணினி அறையின் பயன்பாட்டிலுள்ள HCL கணினி (B093A1168346 Serial)ல் 500GB Hard Disk Processor Mother Board பழுதடைந்துள்ளதை, பழுது நீக்கம் செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ.4900/—ஐ பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்க வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 863/2019/இ1**

**தீர்மான எண்: 410 அனுமதிக்கப்பட்டது.**

**16)**இந்நகராட்சிக்கு சொந்தமான பாதாள சாக்கடை கழிவு நீர் உந்து நிலையத்தில் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்திலிருந்து ஆய்வு செய்யப்படுவதினால், ஆய்வுகட்டணம் செலுத்த வேண்டியுள்ளதால் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1.00/-இலட்சத்தினை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 938/19/இ1**

**தீர்மான எண்: 411 அனுமதிக்கப்பட்டது.**

17)போடிநாயக்கனூர் நகராட்சியில் **2018-19ம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ்** திடக்கழிவு **மேலாண்மைப் பணிக்கு ரூ.5.60 லட்சம் மதிப்பீட்டில்** இரண்டாம்நிலை குப்பை சேகரம் பணிக்கு தேவையான 1 எண்ணம் இலகுரக வாகனம் (Light Commercial Vehicle) -வாங்குவதற்கு **13.02.2019**ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.

| .எண் | ஒப்பந்த நிறுவன பெயர் மற்றும் முகவரி |
|---|---|
| 1 | M/S Krysttal Motors Pvt Ltd. salem.636005 |
| 2 | M/S A B T Industries Ltd – Coimbatore. |
| 3 | M/S Lakshmi Auto Diesel Works Mettur Dam |

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் சரிபார்க்கப்பட்டு, தகுதியான கீழ்க்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்த நிறுவன பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்ட விலை |
|---|---|---|
| 1 | M/S Krysttal Motors Pvt Ltd. | ரூ. **5,44,000** |
| 2 | M/S A B T Industries Ltd – Coimbatore. | ரூ. **5,59,950** |
| 3 | M/S Lakshmi Auto Diesel Works Mettur | ரூ. **5,44,965** |

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள M/S Krysttal Motors Pvt Ltd . salem.636005.என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக்குறிப்பு :** | வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள M/s Krysttal Motors Pvt Ltd. salem.636005 என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். |

**(ந.க.எண்: 356/2019/இ1)**

**தீர்மான எண்: 412 மெஸர்ஸ் கிரிஸ்ட்டல் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட், சேலம் அவர்களது குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

18)போடிநாயக்கனூர் நகராட்சியில் **2018-19ம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ்** திடக்கழிவு **மேலாண்மைப் பணிக்கு ரூ.25.20 லட்சம் மதிப்பீட்டில்** முதல்நிலை குப்பை சேகரம் பணிக்கு தேவையான 14 எண்ணம் பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் (Battery Operator Vehicle) - வாங்குவதற்கு 13.02.2019ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவன பெயர் மற்றும் முகவரி |
|---|---|
| 1 | Priyam Industries and Engineering Pvt Ltd. No 625 Surya Complex 2nd Floor, Annasalai, Chennai 600 006. |
| 2 | M/s Arun Indian Motors, Chennai. |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் சரிபார்க்கப்பட்டு, தகுதியான கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்த நிறுவன பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்ட விலை |
|---|---|---|
| 1 | Priyam Industries and Engineering Pvt Ltd. No 625 Surya Complex 2nd Floor, Annasalai, Chennai - 600 006. | ரூ. 25,10,200 |
| 2 | M/s Arun Indian Motors, Chennai. | ரூ. 25,17,200 |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள M/s Priyam Industries and Engineering Pvt Ltd, Chennai. என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள M/s Priyam Industries and Engineering Pvt Ltd, Chennai. என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்: 356/2019/இ1)**

**தீர்மான எண்: 413 மெஸர்ஸ் பிரியம் இன்டஸ்ட்ரீஸ் அன்டு இன்ஜினீரிங் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்களது குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**19)**இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவின்கீழ் 8 வாகனங்கள் இயங்கிவருகிறது ஆனால் 4 (நான்கு) ஓட்டுநர்கள் மட்டுமே உள்ள நிலையில் மேற்கொன்டு நான்கு ஓட்டுநர்களை TEXCO நிறுவனத்தின் மூலம் தற்காலிக முறையில் பணியமர்த்தி துப்புரவுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் 17.2.2019 உடன் முடிவடைய உள்ளதாலும் மேற்படி ஓட்டுநர் காலிப்பணியிடங்களை நிரப்ப முடியாததாலும் மேற்கொண்டு ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்தத்தை நீட்டித்து வழங்கவும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ. 12 இலட்சத்தினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண். 273/2015/H2.**
**தீர்மான எண்: 414 அனுமதிக்கப்பட்டது.**

**20)**இந்நகராட்சி அலுவலகப்பயன்பாட்டிற்கு 2019–20ம் ஆண்டிற்கு, எழுதுப்பொருட்கள், படிவங்கள், பதிவேடுகள் மற்றும் கணினி உபகரணங்கள் கொள்முதல் செய்திட ஒப்பந்தபுள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள ஏற்கனவே மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அவசர அவசியம் கருதி நிர்வாக நலனை கருத்தில் கொண்டு 07.03.19ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | Theni district printers service industries co-operative society ltd,Theni. | ஒப்பந்தப்புள்ளி படிவம் வரிசை எண் 1 முதல் 65 வரை ஒரு பொருளின் விலை விகிதம் குறைவாக குறிப்பிட்டுள்ளார். |
| 2. | The Periyakulam Anna ladies Polythere works indl co-op society ltd,Periyakulam. | ஒப்பந்தப்புள்ளி படிவம் வரிசை எண் 1 முதல் 65 வரை ஒரு பொருளின் விலை விகிதம் அதிகம் குறிப்பிட்டுள்ளார். |

மேற்குரிய இரண்டு கூட்டுறவு அச்சகங்களிடமிருந்து பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியில் வரிசை எண் 1 ல் குறிப்பிட்டுள்ள கூட்டுறவு சங்கம் குறைவான விலை விகிதம் குறிப்பிட்டு ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளார்.

மேற்கூரிய கூட்டுறவு சங்கம் மூலம் எழுதுப்பொருட்கள் கொள்முதல் செய்யவும், உரிய செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :** 1. ஒப்பந்தப்புள்ளிகோரி நடவடிக்கை மேற்கொண்டதையும், உரிய செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. எழுதுப்பொருட்கள் கொள்முதல் செய்திட ரூ.15.00 லட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.தற்பொழுதுதேவைபட்டியலின் அடிப்படையில் செலவினம் மேற்கொள்ளப்பட உள்ளது. பட்டியல் தொகையுடன் தற்பொழுது கூடுதலாக GST வரித்தொகை தனியே செலுத்த வேண்டி உள்ளது.அதற்கும் அனுமதி வழங்கலாம்.

3. குறைவாக ஒப்பந்தப்புள்ளி சமர்பித்துள்ள தேனிமாவட்ட அச்சக கூட்டுறவு சேவை சங்கம் லிட், தேனி மூலம். எழுதுப்பொருள்கள் கொள்முதல் செய்திவும் செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிவழங்கலாம்.

**(ந.க.எண்: 921/2019/B2)**

**தீர்மான எண்: 415 அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**21)**இந்நகராட்சி பொதுசுகாதாரம் பிரிவிற்கு ஏற்கனவே கட்டப்பட்டுள்ள Onsite Compost Centre–ல் கட்டுமான பணிகளை செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.2.00/– இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 526/2019/இ1)**

**தீர்மான எண்: 416 அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**22)இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பரமசிவன் கோவில் திருவிழா (15.4.19 முதல் 22.4.19 ம் தேதி வரை) 8 நாட்களுக்கு நடைபெறுவதனால், பரமசிவன் கோவில் அடிவாரம் உள்ள ஓடை நடைபாதையில் 25 எண்ணம் உள்ள மின் கம்பங்களில் தற்காலிகமாக 8 நாட்களுக்கு 4 அடி குழல் விளக்குகள் தனியார் மூலமாக அமைப்பதற்கு உத்தேச செலவினம் ரூ.10,000**/- ஐ பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1.மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.1356/19/இ1**

**தீர்மான எண்: 417 அனுமதிக்கப்பட்டது.**

23)இந்நகராட்சி பகுதியிலிருந்து வீரபாண்டி திருவிழாவிற்கு செல்லும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு பேருந்து நிலையத்தில் நிழல்பந்தல் மற்றும் கூடுதல் விளக்குகள் அமைக்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.11,000/- யை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண். 1357/19/இ1**

**தீர்மான எண்: 418 அனுமதிக்கப்பட்டது.**

**24) 2019-ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12-ன் கீழ் ஏற்படுத்தப்படும் உப விதிகள்**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன் பிரிவு 306(28A), 308(A) ன் படியும், 2019ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12ன் கீழ் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை (Use and throwaway plastic) சேகரித்தல் (Storage) வழங்குதல் (Supply) கொண்டு செல்லுதல் (Transport) விற்பனை செய்தல் (Sale) மற்றும் பகிர்ந்தளித்தல் (Distribution) ஆகியவற்றை தடை செய்து மேற்கண்ட துறை விதிகளை மீறுகின்ற நபருக்கு கீழ்கண்டவாறு அபராதம் விதிக்கவும் துணை விதிகள் ஏற்படுத்தலாம்.

1. (i) **செயலாக்க அதிகாரி**: நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவா் நகராட்சி ஆணையாளா் ஆவா்.

   (ii) **ஆய்வு நடத்தும் அதிகாரி**: ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவா்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவு பணிமேற்பாா்வையாளா், துப்புரவு ஆய்வாளா், நகா்நல அலுவலா் அல்லது துப்புரவு அலுவலா் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளா்களாவா்.

   (iii) **மேல்முறையீட்டு அலுவலா்**: இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடா்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலா் ஆணையரே ஆவாா்.

   (iv) **தண்டனைகள் விதிக்கும் முறைகள்**:
   இந்த உப விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளை மீறுபவா்களுக்கு முதல்முறை இரண்டாம் முறை மற்றும் மூன்றாம் முறையான குற்றத்திற்கு அட்டவணை 2ல் கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அபராதத்தை குற்றம் நடைபெறுகின்ற இடத்திலேயே(Spot fine) வசூலிக்கப்படுவதுடன் தடை செய்யப்பட்ட நெகிழிகள் பறிமுதல் செய்யப்படும். நான்காவது முறையாக மீறுபவருக்கு உடனடியாக தொழில் உரிமம் இரத்து செய்யப்படும்.

2 **வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு :**

I. மொத்தமாக (Whole sale)
சேமித்தல்/வழங்குதல்/கொண்டு செல்லுதல்/ விற்பனை செய்தல்/பகிர்ந்தளித்தல்

II. வணிக வளாகங்கள், துணிக்கடைகள் பல்பொருள் அங்காடிகள், திரை அரங்குகள், திருமண மண்டபங்கள், மதுபான கூடங்கள், தொழிற்சாலைகள், பள்ளி கல்லூரி நிறுவனங்கள் மற்றும் பெரிய வணிக நிறுவனங்கள்.

III. மளிகை கடைகள், மருந்து கடைகள், பழக்கடைகள், காய்கறி கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் முதலானவைகள்,

**IV.** சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோரக்கடைகள் மற்றும் இதர வணிக நிறுவனங்கள்.

3. **இந்த துணை விதியை மீறினால் செலுத்தும் அபராதம்:-**
இந்த துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கு பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கை காலம் 30 நாட்கள் ஆகும். அதற்கும் பிறகு இந்த துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணைப்படி இந்த துணை விதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவார்.
துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசு படுத்துவர்

4. **அட்டவணை II-ல் குறிப்பிட்டபடி அபராத தொகை** கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில் அவருக்கு எதிராக கடையை / நிறுவனத்தை அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் / மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 / பொது சுகாதார சட்டம் 1939 ன்படி வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

5. **மேல் முறையீட்டுக்கு உரிமை:-**
போடிநாயக்கனூர் நகராட்சியின் இந்த துணை விதிகளில் பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்ய உரிமையுள்ளவர்கள் ஆவர். இந்த துணை விதிகள் போடிநாயக்கனூர் நகர் மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வந்துள்ளன.

6.**தண்டனைகள் விபரம்:-**

## அட்டவணை II

**பிரிவு 306 (28-A)-ன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்**

| வரிசை எண். | குற்றங்கள் | முதன்முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| i. | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல், வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 25000 | 50000 | 100000 |

| | | | | |
|---|---|---|---|---|
| ii | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 10000 | 15000 | 25000 |
| iii. | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 1000 | 2000 | 5000 |
| iv<br>4. | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 100 | 200 | 500 |

**(ந.க.எண். 6465/2016/எச்2)**

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 419 அனுமதிக்கப்பட்டது.**

25)போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட **33** வார்டுகளுக்கு சாதாரண உள்ளாட்சி தேர்தல்–**2019** நடைபெற உள்ளதை ஒட்டி தேனி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை உத்தரவின்படி , **31.01.2019** இறுதி வாக்காளர் பட்டியலிருந்து சாதாரண உள்ளாட்சி தேர்தல்–**2019** க்கான வாக்குச்சாவடி பட்டியல், வாக்குச்சாவடி வரைபடம், வாக்காளர் தொடர்பு பட்டியல், வாக்குச்சாவடி வரைவு பட்டியல் மற்றும் சரிபார்ப்பு பட்டியல் ஆகிய விபரங்களை சென்னை தேர்தல் ஆணையம், தேனி மாவட்ட தேர்தல் அலுவலர் (உள்ளாட்சி பிரிவு) மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை ஆகியோர்களுக்கு புத்தக வடிவில் தயார் செய்து சமர்ப்பிக்கவும், வார்டு வாரியாக SC/ST பட்டியல் தயார் செய்து சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு புத்தக வடிவில் சமர்ப்பிக்கவும் இனி தொடர்ந்து நடைபெற உள்ள உள்ளாட்சி தேர்தல் தொடர்பான இதர பணிகளுக்கும் சேர்த்து உத்தேச செலவினம் ரூ. 3.00/– இலட்சம் ஆகும். மேற்படி செலவினத்தை 2019–2020 ஆம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டிசமர்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.853/2019/எப்1)**

**தீர்மான எண்: 420 அனுமதிக்கப்பட்டது.**

26) போடிநாயக்கனூர் நகராட்சி பகுதியில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மறுவரையறை ஆணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3174/2017/தேபொ1, நாள்.19.10.2017, 07.12.2017 மற்றும் 13.12.2017 ஆகிய கடிதங்களில் தெரிவித்துள்ள வழிகாட்டுதல்படி வரைவு வார்டு மறுவரையறை கருத்துருக்கள், படிவங்கள் மற்றும் வரைபடங்கள் ஆகியன தயார் செய்யப்பட்டு நகர்மன்ற தீர்மான எண்.199– 14.12.2017ல் நகர்மன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டது. வரைவு மறுவரையறை முன்மொழிவுகள் மாநில தேர்தல் ஆணையம், சென்னை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது. மேற்படி வரைவு மறுவரையறை முன்மொழிவுகள் தொடர்பாக கடந்த 12.01.2018ம் தேதி வரை ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடமிருந்து 39 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பான மண்டல வாரியான மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அலுவலகத்தில் 06.02.2018 அன்று ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. பெறப்பட்ட ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகளில் கோரிக்கைகள் அரசு வழிகாட்டுதலுக்கு முரணாக இருந்ததால் நிராகரிக்கப்பட்டது. தற்போது மாற்றியமைக்கப்பட்ட உத்தேசங்கள் உறுப்பினர்செயலர், மறுவரையறை ஆணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3174/2017/இஜி1, நாள்.31.01.2018ம் தேதிய கடிதத்தின்படி உரிய வழிகாட்டுதலின்படி தயார் செய்ய ஏற்பட்ட மொத்த செலவினம் ரூ.1,88,500/– ( ரூபாய் ஒரு இலட்சத்து எண்பத்தெட்டாயிரத்து ஐந்நூறு மட்டும்) மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி செலவினத் தொகையினை 2019–2020 ஆம் ஆண்டு வருவாய் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2.இந்நகராட்சி பகுதியில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மறுவரையறை ஆணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3174/2017/தேபொ1, நாள்.19.10.2017, 07.12.2017 மற்றும் 13.12.2017 ஆகிய கடிதங்களில் தெரிவித்துள்ள வழிகாட்டுதல்படி வரைவு வார்டு மறுவரையறை கருத்துருக்கள், படிவங்கள் மற்றும் வரைபடங்கள் ஆகியன தயார் செய்ய குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு.சி.கருத்தப்பாண்டி, டிசிஇ என்பவருக்கு மேற்படி செலவினத் தொகை ரூ.1,88,500/–ஐ வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண்.5334/2017/எப்1.)**

**தீர்மான எண் : 421 அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**தனி அலுவலர் (ம) ஆணையாளர்,**
**போடிநாயக்கனூர் நகராட்சி.**